உ
முருகா

தமிழர் திருநாள் ஆசிபெறும்

# 8ஆம் ஆண்டு வள்ளிமலை மலைவலம் படிவிழா

(திருவள்ளுவர் ஆண்டு 2050; எழில்மாறல் ஆண்டு)





மலையில் விளங்கிய கந்த என்றுனை
மகிழ்வொடு வந்திசெய் மைந்தன் என்றனை
வழிவழி அன்பு செய் தொண்டு கொண்டருள் பெருமாளே !

– அருணகிரியார்

வள்ளிமலை சென்று வணங்குவார் மாநிலத்தில்
வெள்ளி மலைபோல மிகவோங்கி – உள்ளியன
எல்லாம் பெறுவர் இனியராய் இன்புறுவர்
பல்லாண்டு வாழ்வர் பரிந்து

– திருமுருக கிருபானந்தவாரியார்

இடம்

## அருள்மிகு தேவி வள்ளியம்மை தவப்பீடம்

வள்ளிமலை – 632 520, வேலூர் மாவட்டம்.

நாள்

**12.01.2019** முதல் **13.01.2019** வரை, காரி (சனி)க்கிழமை, ஞாயிறு

**தெய்வத் தமிழ் அறக்கட்டளை,**

சென்னை – 600 032.

உ
முருகா

## தமிழர் திருநாள் ஆசிபெறும்

# 8ஆம் ஆண்டு வள்ளிமலை மலைவலம் படிவிழா

சேந்தன் செந்தமிழ்ச் செம்மல்களே !

அதிசயம் அநேகம் உற்ற திருத்தலம் வள்ளிமலை. இங்கே ஆண்டு தோறும் தந்தை திருப்புகழ் சிவம் நடமாடும் தெய்வமாய் விளங்கிய வாரியார் சுவாமிகளுடன் இணைந்து வள்ளிமலையில் 60 ஆண்டுகளாக மலைவலம் – படிவிழாவை நடத்தி வந்தனர். தமிழ்ப்புத்தாண்டிற்கு முன்னதாக தமிழ்க் கடவுள் எனப்படும் திருவேலிறைவனின் ஆசிபெறுவது அப்பெரியோர்களின் நோக்கம்.

உண்மைத் தமிழ்ப்புத்தாண்டு என்பது இதுவே என உலகிற்கு உணர்த்து முகமாக தமிழர் திருநாள் என்றே வழங்கப்படும் பொங்கல் திருநாளை முன்னிட்டு 7 ஆண்டுகளாக தெய்வத்தமிழ் அறக்கட்டளை அன்பர்கள் இவ்விழாவினை நடத்தி வருவதன் தொடர்ச்சியாக இவ்வாண்டும் பெரியோர்களின் ஆசியும், திருவருளும் உந்திச் செலுத்த விழா கீழ்க்கண்ட குறிப்புகளின்படி நடைபெற உள்ளது.

இடம் : **தேவி வள்ளியம்மை தவப்பீடம்,**
வள்ளிமலை 632 520 வேலூர் மாவட்டம்
நாட்கள் : **12.01.2019; 13.01.2019** (காரி–சனி; ஞாயிறு)

வரும் பொங்கலிலிருந்து இறையருளால் வாழ்வு பொங்க, எண்ணியது ஈடேற ஆர்வமுள்ள அன்பர்கள் கலந்து கொண்டு அருள் நலம் பெற அன்புடன் அழைக்கின்றோம். உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்குமிடம் அவரவர் சொந்த ஏற்பாடு.

---

**இரு நாட்களுக்கு உணவு நன்கொடை :**

**திரு.கு.துரைசாமி,**

**அம்பத்தூர் கொற்றவை திருக்கோயில் அர்ச்சகர்**

---

விழா நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளவாறு நடைபெறும்.
அனைவரும் வருக ! அருள் நலம் பெறுக !

இங்ஙனம்,
**தெய்வத்தமிழ் அறக்கட்டளை**

# நிகழ்ச்சி நிரல்

## 12.01.2019; காரி (சனி) க்கிழமை

மாலை 4.00 மணி : தவப்பீடத்திலிருந்து படி விழா புறப்பாடு

மாலை 6.00 மணி : பண்ணிசை– திருமுறை மா மணி

**தி. கதிர்வேல் சுப்ரமணியம்**

மாலை 7.00 மணி : கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிலரங்கச் சிறப்புரைகள்

1. திருமுருகாற்றுப்படை 2. திருப்புகழ்
3. கந்தரநுபூதி 4. கந்தரலங்காரம் மற்றும்
5. விரும்பிய தலைப்புகள்

(குறிப்பு : சமய உலகில் சிறந்த சொற்பொழிவாளர்களை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்படும் பயிலரங்கம் இது. 15 நிமிடங்களுக்கு என எவர் வேண்டுமானாலும் முன்பதிவு செய்து உரையாற்றலாம்).

ஒருங்கிணைப்பாளர்கள் : **திரு. S. நாகரத்தினம் & திரு. ம.கருப்புசாமி**

## 13.01.2019; ஞாயிற்றுக்கிழமை

காலை 6.00 மணி : திருப்புகழ் பாராயணத்துடன் மலைவலம் புறப்பாடு

காலை 8.30 மணி : இசை அரங்கம் : வழங்குவோர்

திருமுறை மா மணி **வள்ளி உமாபதி**

திருமுறை மா மணி **சு. கதிரேசன்**

திருமுறை மா மணி **தமிழ்ச்செல்வன்**

---

சிறப்புரை :

**கலம்பகக் கவி திரு. இரா. உமாபதி**

**சித்தாந்தரத்தினம் திரு. ச. திருச்சுடர்நம்பி**

நிறைவுரை :

செந்தமிழ் வேள்விச் சதுரர் , முதுமுனைவர்

**மு.பெ.சத்தியவேல் முருகனார்**

---

பகல் 1.00 மணி – **அருளமுது ஆர்தல்**

★ அவசிய முன்வேண்டிப் பலகாலும்
அறிவின் உணர்ந்து ஆண்டுக் கொருநாளில்
தவசெபமுந் தீண்டிக் கனிவாகி
சரணமதும் பூண்டற்(கு) அருள்வாயே

– அருணகிரியார்

★ இஸ்லாமியர் ஆண்டுக்கொரு முறையாவது ஹஜ் புனிதப் பயணம் செய்வது போல் முருகனடியார்கள் ஆண்டுக்கொரு முறையாவது வள்ளிமலைக்குச் சென்று முருகனை வணங்க வேண்டும்.

– வாரியார் சுவாமிகள்

★ வள்ளிமலையில் தங்குவதற்குப் பல சத்திரங்கள் உள்ளன,

★ தமிழர் திருநாளான பொங்கலுக்கு முன் வள்ளிமலை முருகனின் ஆசி பெற்று ஆண்டைத் தொடங்குங்கள் !

---




இணையதளத்தில் ஆசிரியர்!
முகவரி
மின்னம்பலம் :
www.dheivamurasu.org, www.tamizhthoothu.com
மின்னஞ்சல் :
editor@dheivamurasu.org, tcnambi@gmail.com
mpsvelmurugan@gmail.com

ஆசிரியர் தொடர்பு :
**செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பெ.சத்தியவேல் முருகனார்**
12/F, பதினொன்றாம் தெரு, நியூகாலனி, ஆதம்பாக்கம்,
சென்னை–600 088. கைபேசி : 94440 42770